**செய்தி வெளியீடு** நாள் : 22.10.2024

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.15.20 கோடி செலவில் கட்டப்பட்டு, முடியும் தருவாயில் உள்ள கிளாம்பாக்கம் புதிய காலநிலை பூங்காவையும் மற்றும் ரூ.42.70 கோடி செலவில் கட்டப்பட்டு, முடியும் தருவாயில் உள்ள முடிச்சூர் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினையும்**

**மாண்புமிகு அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு**

***********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (22.10.2024) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் 16 ஏக்கர் பரப்பளவில் ரூ.15.20 கோடி செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அமைக்கப்பட்டு, முடியும் தருவாயில் உள்ள புதிய காலநிலை பூங்காவையும் மற்றும் முடிச்சூரில் 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.42.70 கோடி செலவில் அமைக்கப்பட்டு, முடியும் தருவாயில் உள்ள ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினையும் (Idle Parking for Omni Buses) மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர்** (ம) **தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் 16 ஏக்கர் பரப்பளவில் தொல்லியியல் துறை (ASI) அனுமதியோடு ஒரு காலநிலை பூங்கா உருவாக்குவதற்கான பணியை தொடங்கினோம். சுமார் 15 கோடி ரூபாய் செலவில் இந்த காலநிலை பூங்கா உருவாக்கப்பட்டிருக்கின்றது. மக்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த ஒரு பகுதியாகவும், மக்களுக்கு காலநிலை பூங்கா என்றால் என்ன என்று விளக்குகின்ற வகையிலும், மக்களின் தேவைக்கேற்ப புதிய விஷயங்களை பரிணாம வளர்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையிலும் இங்கு பலதரப்பட்ட செடிகள், காடுகள் ஆகியவற்றையும் உருவாக்கப்பட்டிருக்கின்றன மேலும் உருவாக்கப்பட இருக்கின்றன.

இதைப் பொறுத்தளவில் இன்னும் 25 நாட்களுக்குள் மக்களுடைய பயன்பாட்டிற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அர்ப்பணிக்க இருக்கின்றார். இந்தப் பணிகளை மேலும் துரிதப்படுத்துவதற்கும் விரைவாக இந்த பணிகளை முடிப்பதற்கும் இன்றைக்கு இந்த மாவட்டத்தினுடைய அமைச்சரும், சட்டப்பேரவை உறுப்பினர் உட்பட ஏனைய அதிகாரிகளும் ஆய்வு

செய்து இருக்கின்றோம். இந்த காலநிலை பூங்காவில் தொல்லியியல் விளக்க மையம், அகழிகள், அதே போல் மழை நீரை சேமிக்க வேண்டிய வகையில் 3 குளங்கள், உயர்மட்ட நடைபாதை, சிறுவர் விளையாட்டு பூங்கா, சிலைகள் பூங்கா, மரத்தோட்டம், அல்லிகுளம், விளையாட்டு மைதானம், திறந்தவெளி அரங்கம் மற்றும் 1500 மரங்கள் நடப்பட்டுள்ளன. அதேபோல் கண்காட்சி மேடைகள் என்று பல விதமான பொழுதுபோக்கு அம்சங்களுடன் பார்வையாளர்களை கவருகின்ற வண்ணம் இந்த பூங்கா உருவாக்கப்படும். நிச்சயம் இந்த பூங்கா உருவாக்கத்தினால் இதில் பயணிக்கின்ற பயணிகளுக்கும் இந்த பகுதி வாழ் மக்களுக்கும் ஒரு சிறந்த பொழுதுபோக்க அம்சமாக இது திகழும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் அருகிலே முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையத்தில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அறிவிக்கப்பட்ட ஆம்னி பேருந்துகளுடைய பேருந்து நிலையத்தையும் மக்களுக்கு **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** இந்த காலநிலை பூங்கா திறப்பின் போது, அதையும் திறந்து வைத்து, ஆம்னி பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு ஒரு மிகப்பெரிய அளவில் அந்த பேருந்து நிலையம் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆம்னி பேருந்து நிலையத்திலும் உணவகங்கள். தங்குமிடங்கள், கழிப்பறைகள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே நேரத்தில் 150 பேருந்துகள் நிறுத்துகின்ற அளவிற்கு முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையத்தில் வசதி செய்யப்பட்டு இருக்கின்றது. அதுவும் கூடிய விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

Q தீபாவளிக்கு முன்னதாக வருமா அல்லது தீபாவளிக்கு பிறகா?

தீபாவளிக்குப் பிறகு அந்த ஆம்னி பேருந்த நிலையம் பயன்பாட்டிற்கு வரும் இப்பொழுது நமது போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களும் நேற்றைக்கு எங்கள் துறையினுடைய செயலாளர் அவர்களும் கலந்தாய்வு கூட்டம் நடத்தியபோது 14 ஆயிரம் பேருந்துகள் புதிதாக அதிகப்படியாக பண்டிகை காலங்களில் மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதும். அதேபோல் ஊர் திரும்புவதற்கு பண்டிகை காலங்களில் 12 ஆயிரம் பேருந்துகளை அதிகப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கும் நேற்றைக்கு அறிவிப்பு செய்து இருக்கின்றார்கள். அதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நெடுங்கலான கிளாம்பாக்கம் பேருந்து முனையம், கோயம்பேடு பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் பேருந்து நிலையம் ஆகிய பேருந்து நிலையங்களிலும் அடிப்படை தேவைகள், மக்கள் அதிகம் கூடுகின்ற பொழுது குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, சுகாதார வசதி மற்றும் மருத்துவ வசதி போன்றவைகளையும் அந்தப் பகுதிகளிலே புதிதாக கூடுதலாக ஏற்படுத்துவதற்கான துறையினுடைய செயலாளர் அவர்களும், உறுப்பினர் செயலாளர் அவர்களும் கலந்து ஆலோசித்துள்ளோம். அந்த வகையில் அதிக அளவு மக்கள் கூடுகின்ற பொழுது மக்களினுடைய பயன்பாட்டிற்கு ஏற்ப மக்களுடைய அடிப்படை செய்திகள் ஏற்படுத்தி தரப்படும்.

Q கிளாம்பாக்கம் ரயில் நிலைய பணிகள் எந்த அளவு முடிவற்றது அதற்கான ஒத்துழைப்பு கிடைக்கின்றனவா?

தொடர்ந்து எங்களுடைய துறையின் செயலாளர் அவர்களும், உறுப்பினர் செயலாளர் அவர்களும் தொடர்ந்து அதற்கு உண்டான அழுத்தத்தை தந்து கொண்டிருக்கின்றோம். அவர்கள் கூறுகின்ற பொழுது எல்லாம் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல் நாமும் அது குறித்து கலந்தாய்வு கூட்டம் கூட்டி அதில் கலந்து கொள்ள செய்கிறோம். இன்னும் பத்து நாட்களில் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சரும் நானும் நேரடியாக அந்த பகுதிகளை ஆய்வு செய்ய இருக்கின்றோம், எவ்வளவு விரைவுப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக அந்த பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல் உயர்மட்ட மேம்பாலம் (Sky Walk) பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. நில ஆர்ஜித்த படுத்துகின்ற பணிகளும் அந்த நிலத்திற்கு சொந்தமானவர்களுக்கு அந்த நிலத்தை எடுப்பதற்குண்டான தகவலையும் தெரிவித்து இருக்கின்றோம். கூடிய விரைவில் கடந்த ஆட்சி காலத்தில் எடுத்தேன் கவுத்தேன் என்று துவங்கப்பட்ட இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின் கட்டமைப்புகளையும், அடிப்படை தேவைகளையும் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கும் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் ஏதோ பேருந்துகளை திறந்து விட்டோம் என்று இல்லாமல் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் தொடர் முயற்சியாக ஆய்வின் மூலமாக மேற்கொண்டு வருகிறோம். **இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.அருண்ராஜ், இ.ஆ.ப., அவர்கள், தாம்பரம் காவல் துணை ஆணையாளர் திரு.பவன் குமார், இ.கா.ப., அவர்கள், காட்டான் குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.உதயா கருணாகரன், துணைத் தலைவர் திரு.வி.இளங்கோவன், மறைமலைநகர் நகர்மன்ற தலைவர் திரு.ஜெ.சண்முகம், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமை நிர்வாக அலுவலர் மருத்துவர் பால் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.